



# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## இயேசுவின் கண்ணீர் கற்பிக்கும், ஆறுதல்!

இயேசு கண்ணீர் விட்டார்! ஒருமுறை லாசரு மரித்த நேரத்திலும், மறுமுறை எருசலேம் நகரத்திற்காகவும் கண்ணீர் விட்டார்! ஆனால், "கொல்கொதாவின் கொடூர துன்பத்தில்" எருசலேம் குமாரத்திகள் "அவருக்காக அழுததை" ஏற்றுக்கொள்ள மறுத்தார்! "சுய - பரிதாபம்" நாம் அழித்து வாழவேண்டிய "ஓர் கொடிய சுயம்" என அறியக்கடவோம்! மனுஷர்களுக்கு முன்பாக வடிக்கும் கண்ணீரும், அவர்களின் ஆறுதலும் வீண்! "மானிட ஆறுதல்" வஞ்சனைக்குரியது! என நாம் அறிவது நலம்! எந்த மனுஷரிடத்திலும் 'சுய-பட்சாதாபம்' தேடி கண்ணீர் விட மறுக்கும் "திட நெஞ்சம் கொண்ட" சீஷர்கள் மாத்திரமே, இயேசுவின் பாதத்தில் கண்ணீர் விடவும், அவரின் ஆறுதல் பெறவும் பாக்கியம் பெற்றவர்கள்! இவர்களுக்கே "தேற்றரவாளனை" இயேசு தந்தருளியுள்ளார்!

*-tr*

மார்ச் 2019

பெட்டகம் 21

பரல்கள் 3



# நிலைத்திருக்கும் கனி வாழ்க்கை!

'நல்ல காலத்தில்' அத்திப்பழம், நிறைய பழுத்திருக்கும்! அந்த காலம் முடிந்ததும் கனிதராது! இதை இயேசுவும் அறிவார் (மாற்கு.11:13). ஆனால், வாழ்வின் நல்ல காலத்தில் விசுவாசம், மகிழ்ச்சி என வாழ்ந்து விட்டு, நல்ல காலமில்லாத துயர சூழ்நிலையில் அவிசுவாசமும், மகிழ்ச்சி இழந்த ஜீவியத்தை மாற்றவே இயேசு வந்தார்! நட்பின் நேரத்தில் அன்பும், விரோத நேரத்தில் அன்பற்ற தன்மையும் கொண்ட 'மாறும் மானிட அன்பை' அழித்திடவே வந்தார்! மாறாத தெய்வ அன்பே பிதாவின் பூரண சற்குணம் என்றார்! (மத்.5:45,48)

'இந்த மானிட அன்பை' தெய்வ அன்பென நம்பி, அதை ஒருவரும் ஒருக்காலும் உன்னிடத்தில் புசித்திடக் கூடாது என.... இஸ்ரவேலின் எல்லா அத்திமரங்களை அல்ல, அந்த ஒரு அத்திமரத்தை சபித்தார்! 'அந்த அத்தி மரம்' வேரோடே பட்டுப்போனது! (மாற்கு.11:14,20). ஆம், இந்த அழைப்பு 'ஒவ்வொருவருக்கும்' உரியது! "எக்காலத்திலும் உங்கள் கனி" நிலைத்திருக்க வேண்டும் என்பதே இயேசுவின் விருப்பம் (யோவான்.15:16), துன்பகாலத்தில் 'கனிதராத' 'அவரவர்' மரம் சபிக்கப்பட வேண்டும்! **மானிடம் ஒழிந்து, தெய்வீகம் மலர வேண்டும்!** அப்போது மாத்திரமே, அவரது தெய்வ அன்பில் நாம் நிலைத்திருப்போம்! அவரது சந்தோஷத்தில் நிலைத்திருப்போம்! (யோவான்.15:9,11). விசுவாசத்தில், ஐக்கியத்தில் என்றும் நிலைத்திருப்போம்!

*-Ed*

'பரலோக பொக்கிஷங்கள்' வருடசந்தா ரூ.150.00
ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் வீதம் ரூ.125.00 அயல்நாட்டு சந்தா ரூ.900.00

வங்கிகணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** IndianBank-Koodal Nagar Branch,
A/c no: **502087685** IFSC Code: **IDIB000K150** (வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாச தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு :
பரலோக பொக்கிஷங்கள், 207A- Zaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.),
MADURAI - 625 018, S.India. Cell: 9843049935 Ph (O) 0452 - 2662306,
**Email: rathnakumar.t@gmail.com** *தமிழ்வலைதளம்*: **paralogapokkishangal.com, tamil.cfcindia.com**
**You Tube : paralogapokkishangal**

## விசுவாசி, இரட்சிப்பை இழந்திட முடியுமா? விழித்திருங்கள்!

*இந்த பூமியிலுள்ள அஸ்திபாரம், அதில் ஒன்றும் கட்டப்படா விட்டாலும் தொடர்ந்து பல வருடங்களாய் நிற்கும்! ஆனால் ஆவிக்குரிய ஜீவியத்தில், உங்கள் அஸ்திபாரத்தில் சீக்கிரமாய் வீடுகட்டப்படாவிட்டால், அல்லது....*

> **பூரணத்தை நோக்கி நீங்கள் வளர்ச்சியடையாவிட்டால், உங்கள் அஸ்திபார ஜீவியமே ஒரு நாளில் சிதைய துவங்கி விடும்! அந்த விசுவாசி, தன்னுடைய இரட்சிப்பை இழந்து போவார், பரிசுத்தாவி அவரை விட்டு நீங்கி விடுவார், தன் விசுவாசத்தை இழப்பார், தன் மனந்திரும்புதலையும் கூட இழந்து போவார்!**

*இவ்வாறு சம்பவிப்பதை அநேக இடங்களில் பார்த்திருக்கிறோம்.*

*எபிரெயர்.6:4,5-வசனங்களில், மறுபடியும் பிறந்த கிறிஸ்தவனின் ஐந்து குணாதிசயங்களை காண்கிறோம்: 1) அவன் 'பிரகாசிப்பிக்கப்படுகிறான்', இருளான அவன் இருதயத்தில் ஒளிபிரவேசிக்கிறது. 2) 'பரம ஈவை ருசி பார்க்கிறான்' இது இயேசு கிறிஸ்துவின் மூலமாய் கிடைத்திடும் இரட்சிப்பின் ஈவேயாகும். 3) 'பரிசுத்தாவியின்' பங்கைப் பெறுகிறான்! அவன் இப்போது ஒரு சாதாரண பெயர் கிறிஸ்தவனல்ல, அவன் பரிசுத்தாவியை பெற்று விட்டான்! 4)'தேவனுடைய நல்ல வார்த்தைகளை' ருசிபார்க்கிறான். அதாவது தேவனுடைய வார்த்தைக்கு தன்னை ஒப்புகொடுத்து, கீழ்ப்படிந்து மகிழ்கிறான். 5) 'இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசி பார்க்கிறான்!'. அதாவது, தன்னுடைய ஜீவியத்தில் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை ருசிக்கத் துவங்குகிறான். இவ்வாறு பரம ஜீவியத்தின் 'அற்புதம்' அவனுக்குள் நிகழ்கிறது. அதனிமித்தமே, கடினமான அநேக சூழ்நிலைகளில், தன் ஜெபத்தின் மூலம் இயற்கைக்கு அப்பாற்பட்ட பதில்களைப் பெற்று ருசிக்கிறான். நாம் கண்டடையும் சுகமும் 'இனி வரும் உலகின்' வல்லமையில் ஒன்றாகும்! அந்த, இனிவரும் உலகில், எந்த நோயுமற்ற பூரண சுகமான உயிர்த்தெழுந்த சரீரத்தை நான் பெற்றிருப்பேன். அதுபோன்ற சரீரத்தை இன்று நான் பெற்றிட*

இயலாது. ஆகிலும், அதன் **முன் ருசியாக ‘சரீர சுகத்தை’** பெற்றுக் கொள்கிறேன். எனவே, ‘சுகம் பெறுதல்’ இனிவரும் உலகத்தின் சம்பூரணத்தைக் காட்டும் முன் ருசியாய் இருக்கிறது. இந்த பூமியிலேயே, ஒவ்வொரு வியாதியிலிருந்தும் சுகத்தை நாம் பெற்றிட இயலாது! ஆனால் தேவனுடைய தயவின்படியும் அவருடைய ஆளுகையின் வல்லமையின்படியும், நாம் சுகவீனமடையும் போது, இந்த பரம வல்லமையை ருசிபார்க்கும்படி, நம்மை சுகமாக்குகிறார்! எப்போதெல்லாம் நான் வியாதிப்பட்டிருக்கிறேனோ, அப்போது நான் ஜெபிப்பதெல்லாம் “ஆண்டவரே, என்னுடைய சரீரத்தில் உமது உயிர்த்தெழுந்த வல்லமையின் ருசியை நான் அனுபவிக்கும்படி கிருபை செய்தருளும். அந்த வல்லமை, நிச்சயமாய் ஒரு நாளில் இயேசுவின் சரீரத்தைப் போலவே முற்றிலும் என்னை மறுரூப மாக்கிடும்! இந்த பூமியில், அதை நான் முற்றிலும் அனுபவித்திட இயலாது. ஆகிலும், இயேசுவின் நாமத்தில் ‘சுகம் பெறும்’ முன்ருசியை எனக்குத் தாரும்” என்றே ஜெபிக்கிறேன். இந்த சுகம்பெறும் பரம முன் ருசியை யாருக்குத் தரவேண்டும்? எப்போது தரவேண்டும்? என்பதை தேவனே தீர்மானிக்கிறார். அது, அவருடைய சர்வ ஆளுகையிலுள்ள தீர்மானம். அநேக சமயங்களில் ‘இந்த பரம ஈவை’ நான் ருசி பார்த்திருக்கிறேன்! இவ்வாறு, இவை அனைத்தையும் அனுபவித்த ஒரு நபர்.....

> தேவனுடைய கிருபையை விருதாவாக்கி, விழிப்பில்லாத ஜீவியமும் முரட்டாட்டமும் செய்தால், அவன் வீழ்ச்சி அடைய முடியும். இந்த வீழ்ச்சி, ஒரு விசுவாசி தவறி விழுந்து, மீண்டும் எழுந்து நிற்பது போன்ற வீழ்ச்சி அல்ல! நாம் எல்லோருமே அவ்வித அனுபவத்திற்கு உரியவர்கள். ஆனால், இந்த வசனம் கூறுவதோ ‘மறுதலித்துப் போனவர்கள்’ என்ற சிலரையே குறிப்பிடுகிறது!

வேதாகமம், ஒரு விசுவாசி இவ்வாறாக ‘மறுதலித்துப் போய் விடுவான்’ என கூறுவதை நான் அப்படியே விசுவாசிக்கிறேன். ஒருவன் ‘வீழ்ச்சியுற்று போய் விடுவான்’ என்ற வாய்ப்பு உண்டு என தேவன் கூறினால், அப்படியே அதை நான் ஏற்றுகொள்கிறேன்! இதைக் குறித்த அறிவை நீங்கள் ஏற்றுக்கொள்ள முடியவில்லையென்றால், நீங்கள் வைத்திருக்கும் வேத-உபதேசம் தவறு என்பதையும்! தேவன் கூறுவதே சரி என்பதையும்! தயவாய் ஏற்றுக்கொள்ளுங்கள். அநேக ஜனங்கள் வேதாகமத்தை நெருங்கும்போது, **“தாங்கள் எண்ணுவதைப் போலவே, வேத வாக்கியங்களும் கூறுகிறது” என்ற சொந்த அபிப்பிராயங்களோடு வாசிக்கிறார்கள்.** எனவேதான், ‘வேதாகமம் நிஜமாகவே என்ன சொல்கிறது’ என்பதை அறியாமல், குருடர்களாகவே நிலைத்

திருக்கிறார்கள். 'வேதாகமம், மெய்யாகவே என்ன சொல்கிறது?' என நீங்கள் அறிய வேண்டுமென்றால் **'ஒரு முற்றிலும் திறந்த மனதோடு'** நீங்கள் வேதாகமத்தை அணுகவேண்டும். நீங்கள் ஏற்கனவே வைத்திருந்த உங்கள் சொந்த வேத விளக்கங்களை விட்டுவிட்டு "ஆண்டவரே, என் கண்களைத் திறந்தருளும்! நான் இதுவரை விசுவாசித்தவைகள் தவறாக இருக்கக்கூடும்!" என ஜெபித்து வாசியுங்கள்! வேதப் புத்தகம், எளிய ஜனங்களாகிய மீனவர்கள் போன்றவர்களுக்கு எழுதப்பட்டதே யல்லாமல், கல்விமான்களுக்கும் ஞானிகளுக்கும் தரப்படவில்லை! தேவன் இவைகளை "ஞானி களுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகர் போன்ற தாழ்மையுள்ளவர்களுக்கே வெளிப்படுத்தி யிருக்கிறார்!" (மத்.11:25).

இதுபோன்ற விசுவாசிகள் விழுந்ததற்கு காரணம் என்ன? ஏனென்றால் "அவர்கள் தேவ குமாரனை மறுபடியும் சிலுவையில் அறைகிறார்கள்" என்பதேயாகும் (எபி.6:6). இதன் பொருள் என்ன? **அவர்களின் 'பாவமே' கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தது!** எனவே, கிறிஸ்து என்னுடைய பாவங்களுக்காக மரித்தார் என தெளிவாய் உணர்ந்த ஒரு விசுவாசி, தன் ஜீவியத்தில் 'பாவத்தை இலகுவாய் எண்ணி' தொடர்ந்து பாவம் செய்து, தேவனுடைய கிருபையை விருதா வாக்கினால், அவன் கிறிஸ்துவை மீண்டும் சிலுவையில் அறைகிறான். பகிரங்கமாய் பாவம் செய்யும் அவன், அன்று திரள்கூட்டம் இயேசுவைப்பார்த்து கூறியதைப்போலவே 'அவரை சிலுவையில் அறையும்! அவரை சிலுவையில் அறையும்!' என்றே கூறுகிறான்.

மனுஷன் பாவம் செய்திருக்காவிட்டால், இயேசு சிலுவையில் அறையப்படவேண்டிய அவசியம் இருந்திருக்காது. நான் சுவிசேஷத்தை சிறுபிள்ளைகளுக்கு கூறும்போது "இந்த முழு உலகத்திலும், எல்லோரும் நல்லவர்களாயிருக்கும்போது **நீ ஒரு பையன் மாத்திரம் அல்லது நீ ஒரு பெண்பிள்ளை மாத்திரம் தவறு செய்திருந்தால்,** உன் ஒருவனுக்காக மரிப்பதற்கென்றே இயேசு பரலோகத்திலிருந்து இறங்கி, உனக்காக மரித்திருப்பார்!" என கூறியிருக்கிறேன். இதுவே சுவிசேஷம்! இந்த முழு உலகத்திலும், எல்லோரும் பரிசுத்தமா யிருக்கும்போது, நீங்கள் ஒருவர் மாத்திரமே பாவியாயிருந்தால், இயேசு உங்களுக்காகவே இறங்கி வந்து, உங்கள் ஒருவருக்காகவே மரித்திருப்பார்! அவர் யாருடைய பாவங்களுக்காக மரித்திருப்பார்? உங்கள் ஒருவருடைய பாவங்களுக்காகவே மரித்திருப்பார்! "இந்த உலகத்தின் பாவங்களுக்காக இயேசு மரித்தார்" என நீங்கள் விசுவாசித்தாலும், நீங்கள் இன்னமும் **மனம் மாறாமலே** இருக்கக்கூடும்.

*நீங்கள் என்று 'உங்கள் பாவங்களுக்காக இயேசு மரித்தார்' என உணர்கிறீர்களோ, அப்போது மாத்திரமே, நீங்கள் இரட்சிக்கப்பட முடியும்! ஆகவே, உங்கள் பாவங்களே, அவரை சிலுவையில் அறைந்தது. எனவே, எப்போதெல்லாம் நீங்கள் பாவஞ் செய்கிறீர் களோ, அப்போதெல்லாம் நீங்கள் அவரை* **மீண்டுமாய்** *சிலுவையில் அறைகிறீர்கள்!*

**பரிசுத்த ஜீவியத்தில், கால் சறுக்குவதையோ அல்லது பாவத்தில் தடுமாறி விழுவதையோ இங்கு நான் குறிப்பிட்டு பேசவில்லை. 'பகிரங்கமாய் அறிந்தே பாவம் செய்வதைக்' குறித்தே நான் இங்கு குறிப்பிடுகிறேன்.**

*இந்த வித்தியாசம் எப்படியெனில், ஒருவன் தவறிப்போய் இன்னொருவர் பாதத்தை மிதிப்பதற்கும், திட்டமிட்டு இன்னொருவர் பாதங்களை மிதிப்பதற்கும் உள்ள வித்தியாசமே ஆகும்! சில சமயங்களில், நீங்கள் 'தற்செயலாக' கோபமடையலாம். ஆனால், வேறு அநேக சமயங்களில், நீங்கள் திட்டமிட்டு பாவம் செய்யலாம்! அதுபோன்ற பாவங்களே, தற்செயலாய் நடந்த பாவங்களைப்போல் இல்லாத கொடிய பாவமாகும்! நீங்கள் தற்செயலாய் ஒரு ஆணியை இயேசுவின் கைகளில் குத்திவிட்டதைப்போல் சம்பவித்தால், அது பாவமாகாது! ஆனால், திட்டமிட்டு அவரது கரங்களில் ஆணி அறைந்தால் அதுவே பாவமாகும். 'எதிர்பாராத விதத்தில்' பாலிய இச்சையின் சிந்தனைக்குள் வீழ்ச்சி அடைய முடியும். எப்படியெனில், ஒரு பத்திரிக்கையில் "கற்பு நெறி தவறச் செய்யும் படம் இருப்பதை நீங்கள் அறியாமலே" பார்க்க நேரிடக்கூடும். அவ்வாறு கண்டுவிட்ட அந்த சமயத்தில், நீங்கள் திடீரென்று சோதிக்கப்பட முடியும். ஆனால் ஆபாச படங்கள் கொண்ட, ஒரு புத்தகத்தை விலை கொடுத்து வாங்கி, அதை பக்கம் பக்கமாய் பார்ப்பதென்பது கொடியதாகும்!*

**இவ்வாறாக, நீங்கள் அறிந்தே பாவம் செய்யும்போது "தேவ குமாரனை" மீண்டும் சிலுவையில் அறைகிறீர்கள்! எனவேதான், ஒரு விசுவாசி தொடர்ந்து பகிரங்கமாய் பாவம் செய்யும்போது தன்னுடைய இரட்சிப்பை இழந்து விட முடியும்!**

*இவ்வாறு கிறிஸ்துவை 'மீண்டும்' சிலுவையில் அறைகிற வர்களை, மனந்திரும்புதலுக்குள் கொண்டு வருவது அதிக கடினமாகும்! இருப்பினும் அந்த நபர் தெளிந்த புத்தியடைந்து "பாவத்தின் அகோரத்தை, கிறிஸ்துவை மீண்டும் சிலுவையில் அறை வதற்கு சமமமானது" என ஆழமாய் மனந்திரும்பி உணர்வடைந்தால், அந்த நபர் கூட, தேவனிடத்தில் திரும்பி வந்துவிட முடியும்! 'இத்தனை பெரிதான இரட்சிப்பை' விழிப்புடன் காத்துக்கொள்ளுங்கள்!!*

*– சகரியா பூணன்*

## ‘கற்பு ஒழுக்கம்’ தீது பேசப்பட்டு, தூயவர் ஒளியில் வென்றேன்!

**எ**ன் கணவர் மரிப்பதற்கு முன்பாக, என் ஆவிக்குரிய வழி நடத்துதலுக்கு ‘ஆலோசகராய்’ நியமிக்கப்பட்டிருந்த M.பெர்டாட் அவர்களைச் சந்திப்பதற்கு பாரீஸ் சென்றிருந்தேன். அவரோ ‘என் ஆவிக்குரிய நிலையை’ புரிந்து கொள்ளாதவராய் பல்வேறு பொதுவான பக்தி காரியங்களை மாத்திரமே பேசினார். அவைகளை நான் ‘செவிக்கொடுத்து’ கேட்கவில்லை. இதை உணர்ந்த அவர், ‘வேறொரு கத்தோலிக்க ஆலோசகரை நீங்கள் பெற்றுக் கொள்வதே நலம்’ எனக் கூறிச் சென்றுவிட்டார்.

இப்போது என் கணவரின் மரணத்திற்குப் பிறகு, பாரீஸ் நகரத்திற்குச் சென்று M.பெர்டாட் அவர்களைச் சந்தித்தேன். அவர் என்னிடம் பலமணி நேரங்கள் பேசிய போதிலும், நான் அவருக்கு மீண்டுமாய் எந்த பதிலும் சொல்லாததைக் கண்டு என்மீது ஒருவித ஆத்திரம் கொண்டார்! ஆனால் உண்மையான என்னுடைய நிலையோ, நான் பெற்ற ஆவிக்குரிய நிலையை அவருக்கு அறிவித்திட நான் விரும்பியதேயாகும். நான் பெற்ற தேவ தயவை எடுத்துக் கூறிட வாய்ப்பு இல்லாதது போலவும் **‘தேவன் அனுமதிக்காததைப் போலவும்’** கண்டேன். ஆனால் M.பெர்டாட் ஆலோசகர் எனக்கு எடுத்துரைத்த வேதாகம ஆலோசனைகள் எனக்கு வெளிப்புற ஆறுதலும், நான் கத்தோலிக்கத்தில் உயர்ந்த மதிப்பான நிலையை அடைவதற்கும் ஏற்ற ஆலோசனைகளாகவே இருந்தது.

> ஆனால் இதுபோன்ற மனுஷர் புகழும், வெளிப்புற மேன்மையான கிரியை களுக்கு கர்த்தர் என்னை ஒருபோதும் அனுமதித்ததில்லை. “நான் மரிக்க வேண்டும்” என்ற ஒரு கொள்கையை மாத்திரமே, தேவன் எனக்கு முன்பாக வைத்திருந்தார்!

ஆனால் இந்த ஆலோசகர், தான் கிருபையில் ஓங்கி வளர்ந்ததாக தனக்குத் தானே எண்ணிக்கொண்டு, என்னோடு பேசியதை என் ஆவியில் உணர்ந்தேன். அவர் கூறிய பக்தி ஆலோசனைகளுக்கு நான் இணங்காததைக் கண்ட அவர் கோபமாய் சென்று விட்டார். அவர், அவ்வாறு சென்றார் என்பதைவிட “தேவன் என் ஆத்துமாவை, அவருடைய ஆளுகையிலிருந்து மறைத்துக் கொண்டார்” என்றே நான் கூறுவேன்.

> அவரோ என்னிடம் ஜெப ஆவி இல்லையென்றும்! *கிரங்கர் அம்மையார்* என்னை “இவள் ஆவிக்குரிய மதிப்புடையவள்” என தவறாய் கணித்துவிட்டார் எனவும்! ‘புறங்கூற’ துவங்கிவிட்டார்!

ஆகிலும், எனக்கென்று நியமனம் செய்யப்பட்ட 'ஆலோசகர்' என்ற மதிப்பை நான் ஒருபோதும் இழக்கவில்லை. அவர் கூறிய அநேக காரியங்களுக்கு கீழ்ப்படிந்திருந்தேன். ஆனால் அவர், **நான் கர்த்தரிடம் கற்றுக்கொண்ட ஜீவவழிகளுக்கு** முரணாகக் கூறியவைகளை 'என் ஆவிக்குரிய தரத்தை இழந்து' ஏற்றுக்கொள்ள முடியவில்லை. என் மனதிலோ 'என் ஆலோசகர் என்ற முறையில்' அவருக்கு கீழ்ப்படியாமல் இருக்கிறேனோ என்ற உணர்வும் என்னை சிறிதளவு பாதித்தது. அதாவது எனக்கு நியமனம் செய்யப்பட்ட ஆலோசகர் கூறிய அனைத்தையும் ஏற்றுக்கொள்ளாததால், 'தேவனுடைய கிருபைக்கு பங்கம் ஏற்பட்டதோ?' என்ற பாதிப்பே ஆகும். இந்த இக்கட்டான நிலையில் நான் ஆண்டவரிடம் என்னை மீண்டுமாய் உறுதி செய்து கொண்டு: "கர்த்தாவே 'நான் ஒன்றுமில்லாதவள்' என்ற நிலை எனக்குப் போதும். உம்மை நேசித்து, உள்ளம் உடைந்து ஜெபித்திடும்....

**என் ஜெப வாழ்க்கையை, யாரோ சிலர் 'ஜெப ஆவி இவளுக்கு இல்லை' என கூறியதினிமித்தம், 'ஜெப ஆவியை கொண்டவள்' என்ற மனுஷர் போற்றும் மேன்மை கொண்ட நிலையை நான் ஒருக்காலும் தேடாதிருப்பேனாக!....**

மெய்யாகவே 'நான் தகுதியில்லாதவள்!' நானோ உம்முடைய சித்தம் நிறைவேற வெகுவாய் பிரயாசப்பட்டு, உமது இருதயத்திற்கு மகிழ்ச்சி கொண்டு வர மாத்திரமே விரும்புகிறேன். இந்த நிலையை நான் அடைந்திட மாத்திரம், நீர் எனக்கு கிருபை செய்தால் போதும்!" என மண்டியிட்டு ஜெபித்தேன்.

M.பெர்டாட் அவர்களோ, ஆலயத்தில் கண்ணியமான பெயரை பெற்றிருந்தார். அதனிமித்தம், நானும் அவருக்கு சிறந்த மதிப்பு கொடுத்தவளாயிருந்தேன். நான் பெற்றிருந்த ஆவிக்குரிய நிலையை அல்லது **சிலுவை வழியின் மூலமாய் தேவனோடு அடைந்திடும் ஐக்கிய உறவை** ஏற்றுக்கொள்ளாத அநேகர் ஆலயத்தில் இருந்தார்கள். இவ்வித சூழ்நிலையை M.பெர்டாட் அவர்கள் சாதகமாக்கி 'உணர்வு பூர்வமாய்' என்னை நெருங்க முயற்சித்தார். அவருடைய பகுதிக்குள் நான் சிறிதும் பிரவேசிக்காமல் 'நானும் பாதிக்கப்படாமல்' நான் மிகவும் மரியாதையோடும், கற்பின் சீரான பண்போடும் அவருக்கு பதில் கூறினேன். அவரோ என் பதிலுக்கு மாறுத்தரமாய் ஒன்றும் சொல்லமாட்டார். அவர் எனக்கு எதிராய் பேசாதிருப்பதின் மூலமாய் 'என்மீது சிநேகம் கொண்டிட' அவர் முயற்சிக்கிறார்! என்பதை அறிந்து, சற்று அதிர்ச்சியடைந்தேன். அவர் அங்கிருந்த சுமார் 2½ ஆண்டுகள், இவ்வாறாகவே தொடர்ந்து என்மீது 'நிர்ப்பந்தத்தைக்'

காட்டினார். அவர் எல்லோராலும் மதிக்கப்பட்டவராயிருந்தார், விட்டுக்கொடுக்கும் குணாதிசயம் கொண்டவர், சிறந்த கல்விமான்! நானோ, என் பட்சத்தில் அவர் மீது நம்பிக்கை இழக்காதிருக்க முயற்சித்தேன். இன்னும் அதிகமாய், அவர் சிறந்த ஆவிக்குரிய நிலைக்கு மனம் மாறிவிடுவார் என்றும் நம்பிக்கையோடு ஜெபித்துக் கொண்டிருந்தேன். ஆனால் அப்படி நான் எதிர்பார்த்தபடி மாற்றம் இல்லாதபடியால், என்னைத் தூர விலக்கி வைத்துக் கொண்டேன்.

"உன்னை அடிக்கடி பார்க்க முடியவில்லையே?" என்று கூட என்னிடம் வந்து விசாரிப்பதைப்போல் கேட்டார். இப்போது நான் மிகுந்த அனல் கொண்டவளாய் மாறி, M. பெர்டாட் அவர்களின் எந்த ஆலோசனைக்கும் அழைப்பிற்கும் முற்றிலுமாய் மறுத்து விட்டேன். என் கணவர் மரிப்பதற்கு முன்பாக, அவரோடு நல்ல நட்பு வைத்திருந்தார். ஆனால் அவர் மரித்தபிறகு, அதுபோன்ற ஒரு நட்பை நான் மிக உறுதியாய் எதிர்த்து நின்றதைக் கண்ட அவரும், அவரோடு இருந்த பாதிரிமார்களும் எனக்கு மிகவும் உபத்திரவம் தருவதற்கு தொடங்கி விட்டார்கள்.

இதுபோன்ற ஆரோக்கியமற்ற சூழ்நிலையில் "யார் தங்களுக்கு எதிரானவர்கள்?" என்ற எண்ணம் அவர்களுக்குள் பிரவேசித்து, அதுபோன்றவர்களுக்கு தீங்கு செய்யவும் முற்பட்டார்கள்.

அதுபோன்ற நிலையில் 'என்னை ஒரு குறியாக வைத்து' நூதனமான தாக்குதல்களை தொடுத்தார்கள். நானோ, அவ்வித தாக்குதலினால் பாதிக்கப்பட மறுத்து நின்றேன்!

என் கணவர் இல்லாத நிலையில், ஒரு புதிய பாடத்தை என் உள்ளத்தில் உறுதிபட எழுதிக்கொண்டேன்: அது என்னவென்றால், "**எதிர்பாலரான யாராயிருந்தாலும், யாதொரு ரூபத்தில் என்னை நெருங்கினாலும் அவர்களை ஆணித்தரமாய் எதிர்த்து நிற்க வேண்டும்!**" என்ற உறுதிமொழியை என் உள்ளத்தில் பெற்றேன்.

நான் ஆண்டவர் மீது கொண்ட அன்பில், சுற்றியுள்ள எளிய மக்களுக்குச் சென்று செய்த சுவிசேஷ ஊழியமும், தான தர்மங்களும் இப்போது என்னால் செய்ய முடியாமல் இருந்தது. இயற்கையாய் ஏற்பட்ட இந்த நிலையை 'எதிராளியைப்போல நின்ற மூத்த குழுவினர்' எனக்கு விரோதமாய் பேசத் துவங்கினர்.

ஆலய பிரசங்க மேடையில் நின்று பிரசங்கித்த அவர்கள் "ஒரு காலத்தில் நம் பட்டணத்தின் நல்ல மாதிரியாய் விளங்கியவர்கள், இப்போது கறைபடிந்து போனார்கள்" என பேசி, தொடர்ந்து பேசிய

*அவர்களின் பிரசங்கங்களில், என்னை விரோதித்து களங்கம் பேசியதைக் கண்டு சற்று மனம் கலங்கினேன். ஆகிலும் ஆவிக்குரிய திடனை, ஆவியானவர் என் உள்ளத்தில் போதித்தார்:*

*"எனக்கும் என் ஆண்டவருக்கும் இடையில் எத்தனையோ குறைகளை வெளிச்சத்தில் கண்டு கழுவியும்..... இன்னமும் வெளிச்சத்தில் என் குறைகளைக் கண்டு உணர்த்தப்பட்டும் வாழ்கின்ற எனக்கு..... "இவர்கள் தீதாய் பேசும் குறைகள்" யாதொன்றும் பெரிதானதொன்றாய் இல்லை! எனக்கும் என் ஆண்டவருக்கும் மாத்திரம் தெரிந்த குறைகள், ஆலயத்திலுள்ள மக்களுக்கு தெரிவிக்கப்படும் என்றால், அவர்கள் என்னை காலின் கீழ் போட்டு மிதித்திருப்பார்கள்! ஆகவே, என்மீது விரோதம் கொண்ட ஆலய பிரசங்கிகள், எனக்கு விரோதமாய் பேசுவதற்கு கர்த்தரே அனுமதித்தார் என உணர்ந்தவளாய் "நான் குற்றவாளியாய் கருதப்பட்டு" மற்றவர்களின் நற்குணங்களை ஏறிட்டுப் பார்த்தபோது, அந்த மற்றவர்களிடம் ஒரு குறையும் இல்லாதிருந்தது போலவும்! அந்த வெளிச்சத்தில், என்னிடம் ஒரு நற்குணமும் இல்லாதிருந்தது போலவும்!".....*

*இப்படி ஒரு பாக்கியமான இடத்தையே ஆவியானவர் எனக்கு சுட்டிக்காட்டி போதித்தார்! இப்போது நான் கண்டடைந்த சிலுவை, நான் கண்டடைந்து வாழ்ந்த மற்ற எல்லா சிலுவையைக் காட்டிலும் அதிக கனம் நிறைந்ததாய் இருப்பதைக் கண்டேன்!*

*சில காலத்திற்குப் பிறகு, என்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்தை நன்கு அறிந்த, வேறு ஸ்தலத்திலுள்ள போதகமார்கள் "உங்களுடைய நற்பெயர் மிக மோசமாய் தூஷிக்கப்படுவதைக் கேட்டு அதிர்ச்சி யடைந்தோம்" என கடிதம் எழுதினார்கள். துன்மார்க்கமான பழி சாற்றிய அனைத்தும் "என் களங்கமற்ற ஜீவியத்திற்கு" மாசு படிந்திட எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சியாகவே இருந்தது! அவர்களின் யாதொரு தீதான குற்றச்சாட்டுகளும் பொய்யானது என்பதை நான் அறிவேன். ஆகிலும், அவைகளை 'நியாயப்படுத்த' நான் துணியவில்லை!*

*இந்நிலையில், தேவபக்திக்குரிய ஒரு சோகத்தோடு, புதிய ஏற்பாட்டை நான் திருப்பிய போது "**என் கிருபை உனக்குப்போதும்!** உன் பெலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" என்ற வேத வாக்கியம், மனம் கலங்கிய அந்த சமயத்தில், எனக்கு ஆறுதலாயிருந்தது!*

*– மேடம் குயான்*

## 'கிறிஸ்துவின் பாடுகளை' தெரிந்து கொண்ட சபைகள் எங்கே?

*'**நீ**தி துறையிலிருந்து விடுதலை அடைந்தேன்!' என மார் தட்டிக் கொள்ளும் இரட்சிப்பு ஒருவனுக்கு இருந்தால் போதுமா? ஒரு துன்மார்க்கனுக்கு தரப்பட்ட நீதியின் விடுதலை "பரிசுத்த இரத்தத்தின் தியாக விளைவு" என அறியாதிருப்பது சரிதானா? உண்மையில், அந்த துன்மார்க்கனின் ஜீவியம் மாற்றமடைவது அல்லவோ இரட்சிப்பு! தெய்வ அன்பின் சகாயத்தைப் பெற்ற ஒருவன், புதுவாழ்விற்குள்* **'தெய்வ கீழ்ப்படிதலை'** *பெற்றிருக்க வேண்டுமல்லவா?*

> **சுடர்வீசும் அக்கினியான விசுவாசம், கிறிஸ்துவின் கட்டளைகள் அனைத்திற்கும் முற்றிலும் தன்னைப் படைத்திடும் அர்ப்பணத்தில் தோன்றுகிறதென, 'விசுவாசத்தின் மேன்மையை' பவுல் கூறினார்!**

*அந்த விசுவாசத்திற்குரிய போராட்டத்தை தன் ஜீவியத்தில் பெற்று, ஜெயமாய் முடிப்பவனே, இந்த பூமியில் நித்திய ஜீவனை அடைந்து நல்ல போராட்டம் போராடியவன்! இன்றைய கிறிஸ்தவர்கள், மேலோட்டமான தேவ ஈவுகளைப் பெற்றுக்கொண்டு, தன் தேவ பக்தியான ஜீவியத்திற்கோ ஆழமாய் வேர் விட மறுக்கிறார்கள்!*

*இந்த உலகம் ஒரு விளையாட்டு களம் அல்ல, அது நம்* **விசுவாசத்திற்கென போராடும் போர்களம்!** *ஆனால், பாவத்தின் சம்பளமாகிய மரணத்திலிருந்து இரட்சிக்கப்பட்டோம் என கூறிக்கொண்டு, கிறிஸ்துவையும் அவர் தந்த இரட்சிப்பையும் பெற்றுக்கொண்டு, இந்த உலகத்தையும் தாராளமாய் அனுபவிக்கலாம் என்ற நிலையே, பெரும்பாலான கிறிஸ்தவர்களின் நிலையாய் இருக்கிறது. இன்று நடக்கும் கிறிஸ்தவ கூட்டங்களில் "தேவன் ஒருவரே, கவர்ந்திழுக்கும் காந்த சக்தியாய் அவர்கள் நடுவில் இருக்கிறார்" மற்ற வேறு எதுவும் அங்கு கவர்ச்சியாய் காணப்படுவதில்லை! என்ற சாட்சி கொண்ட, 'ஒரு கிறிஸ்தவ கூட்டத்தை' நீங்கள் எங்கேயாவது கண்டதுண்டானால் எனக்கு தகவல் கூறுங்கள். நான் நிச்சயமாய் அந்த சபையைக் குறித்து மகிழ்ச்சியடைவேன். இவ்வாறு தேவனை கனப்படுத்தும் சபை தவிர, வேறொரு சபை நமக்கு என்னத்திற்கு?*

> **'சாந்தமுள்ள மனுஷன்' என்ற தெய்வீகமான நற்பெயரை, எல்லா பாவச் செயலாலும் ஆட்கொள்ளப்பட்டு அமைதியாய் திரியும் 'ஒரு எலியின் தரத்திற்கு' உங்கள் கிறிஸ்தவ ஜீவியம் மாறிவிட்ட அவலத்தைப் பாருங்கள்! ஒரு உத்தம**

கிறிஸ்தவன் தன் கற்பு ஒழுக்க ஜீவியத்தில் அனல் தகித்து வாழும் 'ஒரு சிங்கமாய்' அல்லவோ மாறியிருக்க வேண்டும்!

*தன் சொந்த ஜீவியத்தில் கற்பு நெறியில் ஏனோதானோவென்று வாழ்ந்துவிட்டு "தன்னையே ஏமாற்றிக் கொண்டோம் என உணர்வடைந்தான் அந்த* **சிம்சோன்**!*" புத்தி தெளிந்த இந்த நிலையில், தன் சொந்த ஜீவனை வெறுத்தான். தன்* **சொந்த ஜீவனுக்கு தேவன் தரும் மரணமே சரியான தீர்ப்பு** *எனவும் ஏற்றுக்கொண்டான். ஆர்த்தெழுந்த அவன், "நான் பெலனற்றவன்! தேவன் ஒருவரே பெலன் கொண்டவர் ..... சகலமும் அவரே!" என முழங்கி பெலிஸ்திய பிரபுக்களின் சங்கிலி பூட்டிய இரண்டு தூண்களுக்கு நடுவே வெற்றி சிறந்தான்! இது ஒன்றே நம் கிறிஸ்தவ ஜீவியத்தின் இலக்காய் மாறட்டும்! சிம்சோனைப்போல் ஜீவ காலங்களை வீணடிக்கும் மதியீனத்தை ஒழிப்போம்.*

*மீட்கப்பட்ட தன்னுடைய பிள்ளைகளுக்கென இந்த பரந்த உலகத்தில் "ஆவிக்குரிய செல்வங்களை" தேவன் குவித்து வைத்திருக்கிறார்! அதைப் போய் சுதந்தரி! என அவர் அனுப்பினாலும், மீட்கப்பட்ட ஜனங்கள் மறுப்பதும், உதாசீனம் செய்வதும், பெரும் துயரமன்றோ! ஒருவன் வாக்குதத்த பூமியை ஏறிட்டுப் பார்த்து விட்டு, தான் விட்டு வந்த மண்ணின் பழைய வாழ்க்கைக்கு திரும்புவது, கிறிஸ்தவர்கள் அடையும் பெருத்த சோகமல்லவா? கிருபை, ஒரு மனுஷனை இரட்சிக்கும்! ஆனால், அது அவனையும் அவனோடு இருக்கும் உலக பற்றையும் அவனுடைய விக்கிரகத்தையும் சேர்த்து இரட்சிப்பதில்லை!*

*'சூரியனுக்கு கீழ் சம்பவிக்கும்' அனைத்து சம்பவங்களிலும்,* **தேவனுடைய ஊழியம் ஒன்றே** *எதையும் விட அதிகமாய் சோதிக்கப்படும்! ஒரு மெய்யான சபையில், தந்திரமான கரத்தின் கிரியைக்கோ அல்லது மாறுபாடான சம்பாஷணைக்கோ, இடம் இருப்பதில்லை! சபையில் சம்பவிக்கும் ஒவ்வொன்றும் 'சந்தேகத்திற்குரியதென' ஒன்றும் இருந்திடக் கூடாது. இவ்வாறாக, ஒரு மெய்யான சபையில், மறைப்பதற்கென்று ஏதுமிருக்காது!*

ஆகவேதான், ஒரு மெய்யான சபை, மனுஷருக்குள் காணப்படும் பரம இராஜ்ஜியத்தின் 'களஞ்சிய தொட்டியைப்போல்' இருக்கிறது. எனவே அந்த களஞ்சிய தொட்டி ஒரு பக்கம் உடையும்போது, களஞ்சியத்தில் சேர்த்து வைத்த எல்லா பகுதியிலும் விரிசல் ஏற்பட்டுவிடும். இதைக் குறித்து, ஒரு ஸ்தல சபை ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்! தேவனுடைய சபை எக்காலத்தும் மரிப்பதில்லை! ஆனால் 'ஒரு ஸ்தல சபை' மரித்துவிட முடியும்!

நாமோ, நம்முடைய சபையோ, இந்த பூமியில் கால் வைத்திருந்தாலும், நம் இருதயமோ உயர உயர மேலே பறந்து கொண்டிருக்க வேண்டும். உங்களுடைய அல்லது சபையினுடைய ஆவிக்குரிய தன்மை 'சராசரியாக மாறுவதற்கோ' அல்லது காலத்தின் அகோரத்திற்கேற்ப குளிர்ச்சி அடைவதற்கோ, அனுமதித்திட கூடாது!

நாம், ஒரு சரீரத்தில் இந்த உலகத்தில் வாழும் காலம் வரை 'பொதுவான பாடுகளை' எல்லா மானிடர்களோடும் சேர்ந்து அனுபவித்தே ஆக வேண்டும். ஆனால் வேறொரு 'விசேஷித்த பாடுகள்' என உண்டு! அது, சீஷனாய் வாழும் ஒரு கிறிஸ்தவனுக்கே உரியதாகும். அந்த பாடுகளை 'கிறிஸ்துவினிமித்தம்' ஒருவன் மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்வதேயாகும். **கிறிஸ்துவோடு அடைந்திடும் பாடுகள், விலையேறப்பெற்ற, பொக்கிஷ மதிப்புடையதாகும்!** ஆனால், காரிருள் சூழ்ந்த கருமையான ஒரு சுரங்கத்தின் ஆழம் சென்று 'பொக்கிஷங்களைப் பெற்றிட துணியும்' மாந்தர்கள் வெகு சிலரே இருக்கிறார்கள். அதுபோன்ற பாடுகளுக்குள் செல்ல தேவன் ஒருவரையும் கட்டாயப்படுத்துவதில்லை. நம்மை சீரழிக்கும் உலக ஐசுவரியத்தை நம்மீது தேவன் தராததைப் போலவே..... 'இந்த சிலுவையையும்' நம்மீது அவரே கட்டாயமாய் சுமத்திட விரும்பமாட்டார்! இத்தனை விலையேறப்பெற்ற ஐசுவரியமானது, என்ன கிரயம் செலுத்தியாகிலும், அது மரணமே யானாலும் தங்கள் ஜீவனை நேசிக்காதவர்களாய் கிறிஸ்துவினிமித்தம் மனப்பூர்வமாய் பாடுபட ஒப்புக்கொடுத்தவர்களுக்கு மாத்திரமே உரியதாகும்! இவர்களே தங்கள் ஜீவியத்தின் சீரிய கெம்பீரத்தோடு, சாத்தானுக்கு சவாலிட்டு, நரக பாதாளத்தின் கொப்பளிக்கும் கோபத்திற்கு எப்போதும் எதிர்கொண்டவர்களாய் இருப்பார்கள்!

> இவர்களே, உலகத்தில் 'மகிமைபோல் தோன்றும்' 'பொம்மைகளுக்கு' குட்-பை சொல்லிவிட்டு இந்த பூமியின் கடினமான துன்பப் பாதையை தைரியத்துடன் ஏற்று நடப்பார்கள். சிலுவையின் அச்சடையாளங்கள் அவர்கள் மீது காணப்படும்! அவர்கள், பரலோகத்திலும் அறியப்பட்டிருப்பார்கள்! பாதாளத்திலும் அறியப்பட்டிருப்பார்கள்! ஆனால், இன்று இவர்கள் எங்கே இருக்கிறார்கள்? இவ்வித கிறிஸ்தவ இனத்தார், இந்த பூமியிலிருந்து நீங்கி விட்டார்களோ?

இந்த உலகத்தில் மாத்திரமே நாம் பாடுபட அருளப்பட்டிருக் கிறோம்! இவர்கள் மாத்திரமே நித்திய காலமாய் மகிழ்ந்திருக்கும் வாழ்க்கைக்கு பாத்திரர்கள்! இன்றைய சுக ஜீவியத்தை நாடும் கிறிஸ்தவத்தில் 'அங்கொன்றும் இங்கொன்றுமாக' **தேவன்மீது மாத்திரமே**

**தாகம் கொண்ட பரிசுத்தவான்களை** தேவன் எழுப்பி வருகிறார். இவர்களே அழியா, ஆவிக்குரிய சத்தியங்களுக்கு ஆர்வமும்! எந்த எதிர்ப்பின் வார்த்தைகளாலும் அணைந்து போகாத வர்களும்! சத்தியத்திற்கு சரியான விளக்கம் தருவதில் மாத்திரமே திருப்தி அடையாதவர்களுமாயிருந்து..... **தேவனுடைய தவிப்பை** பூர்த்தி செய்கிறவர்களாயிருப்பார்கள்! இவர்களே, ஜீவத் தண்ணீரின் 'ஊற்றுக் கண்ணிலிருந்து வரும்' தண்ணீரை பருகும் வரை திருப்தி கொள்ள மறுப்பவர்கள்! இவ்வாறு, "தேவனுடைய தவிப்பை" அறிந்து வாழ்பவர்கள் எங்கிருக்கிறார்களோ, அங்கே "எழுப்புதலின் தூதன்" எக்காளம் ஊத ஆயத்த நிலையிலிருப்பான். ஆம், அங்கு நிச்சயம் எழுப்புதல் ஏற்படும்!

– *A.W. டோசர்*

---

## பாவத்தின் அகோரம்!

***பா***வத்தின் கொடிய அகோரத்தை மனுஷன் காணக்கூடாததால், அவன் கண்களுக்கு பாவம் வசீகரமாய் தோன்றுகிற அளவுக்கு, அவன் கண்கள் குருடாயிருக்கிறது! இவ்வாறு, பாவத்தின் வசீகரத்தால் ஈர்க்கப்படுகிறவனின் இருதயமும் மனதும் 'உணர்வடையும் தன்மையிலிருந்து' செத்து விடுகிறது. இதுவே, **ஆவிக்குரிய தொழுநோய்க்கு** ஆரம்பமாயிருக்கிறது. அவன் கொஞ்சம் கொஞ்சமாய், தன் கண் பட்டையின்மேல் உள்ள உணர்வை இழக்கிறான், பாத நரம்பின் உணர்வை இழக்கிறான், விரல்களின் மேல் கொண்ட உணர்வை இழக்கிறான்.... இது, படிப்படியாய் வளர்ந்து சீழ்பிடித்த புண்கள் சரீரத்தில் தோன்றத் துவங்குகின்றன!

> **உணர்வுகளெல்லாம் பாதிக்கப்பட்டு, சீரழிந்த இந்த நேரத்தில்தான் 'பாவத்தின் அகோர நிலையை' அவன் கண்கள் காண்கிறது. அவன் ஆத்துமாவில் தோன்றிய குஷ்டம், நரகத்திற்கே இழுத்துச் சென்று தீராத வலியையும், துன்பத்தையும் நிரந்தரம் செய்கிறது!**

கேடான **கற்பு ஒழுக்க நெறி** தவறும் அபாயமான பாவத்தைக் குறித்தும், ஜனங்களுக்கு விழிப்பு இருப்பதில்லை. ஒரு வனத்தின் ஆற்றண்டையில் நான் அமர்ந்திருந்தபோது, 'கொம்புத்தேன்' சேகரிக்கும் ஒருவன், ஆற்றங்கரையிலுள்ள மரத்தில் வேகவேகமாய் ஏறினான். அந்த மரத்தின் கிளையோ ஆற்றின் மையப்பகுதிக்கு மேல் தொங்கியிருந்தது. **'தேனைப் பெற்றுவிடும் ஆசையில்'** மரத்தில் ஏறிய அந்த இளைஞன், ஆற்றில் முதலைகள் சூழ்ந்து அவனைப் பார்த்து கொண்டிருப்பதைக் காணத் தவறி விட்டான். அவனுடைய உடல்

*பருமனை தேன் கூட்டின் கிளை தாங்காது! என்ற பொது அறிவையும் இழந்தான். சரியாக, தேன் கூட்டின் கொம்பை அவன் அடைந்த மகிழ்ச்சியோடு, அந்த கிளை முறிந்து விழுந்தது. ஆற்றில் விழுந்த அடுத்த கணமே, முதலைகள் அவனைப் பீறி தின்றுவிட்டன! இந்த வெறிச் செயலை நான் கண்டு கதி கலங்கிப்போனேன்!*

**இன்றும் உலக மாந்தர்கள், தங்களைவிட்டு கணப்பொழுதில் நீங்கிவிடும் பாவ இன்பத்தைத் தேடி 'தேனை மகிழும்' அந்த நேரத்தில், ஆவிக்குரிய மரணமாகிய முதலையின் வாய்க்குள் சிக்கி சீரழிகிறார்கள்!**

*பாவத்தின் ஒரே ஒரு நோக்கம் 'நம் ஜீவியத்தை' ஆவிக்குரிய மரணத்திற்கு கொண்டு வருவதுதான். இதைத் தவிர வேறொரு நோக்கம் இருப்பதாக நீங்கள் எண்ணி, ஏமாந்து போகாதீர்கள்.*

*இந்த உலகத்தின் தீமைகளுக்கு 'தந்திர வார்த்தைகள்' உண்டு! 'மனதை பறிக்கொடுக்கச் செய்யும்'* **அழகு உண்டு!** *'சுகமான வாழ்வு தருவேன்' என கூறும்* **செல்வமும் உண்டு!** *ஆனால் அதற்குப் பின்னால்* **மறைந்திருக்கும் நித்திய நரக அக்கினியோ அல்லது ஜீவனை அழிக்கும் பொல்லாங்கனோ, இவர்கள் கண்களுக்குத் தெரிவதில்லை!** *அதனிமித்த மாய் நரகத்தின் பாதாளத்திற்குள் வீழ்ச்சி அடையும் இவர்களை 'அவர்கள் நம்பியிருந்த' யாதொன்றாகிலும் காக்க முடிவதில்லை!*

*மற்றொரு முறை, ஒரு அடர்ந்த காட்டிற்குள் நான் சென்றிருந்த போது,* **ஒரு பெரிய கழுகு,** *காட்டாற்றில் மிதந்து வந்த ஒரு செத்த உடலின் மீது விரல் பதித்து தின்று கொண்டிருந்தது. அந்த வெள்ளம் ஒரு நீர் வீழ்ச்சியின் உச்சத்திற்கு சென்றபோது, தான் அமர்ந்து தின்று வந்த சடலத்தை விட்டு விட்டு பறந்து விடலாம் என அந்த கழுகு முயற்சித்தது. ஆனால் பனியின் குளிரில் ஊறி இருந்த சடலம், கழுகின் நகங்களை இறுகப்பிடித்து கொண்டது! கழுகு எவ்வளவோ செட்டை அடித்து தப்பிவிட முயற்சித்தும் முடியாமல், நீர் வீழ்ச்சியின் பாதாளத்திற்குள் "செத்த சடலத்தோடு தானும் விழுந்து" செத்துப் போனது!*

*ஆகிலும் நாம் பெற்ற சுவிசேஷமோ, பாவத்தின் பிடியிலிருக்கும் யாராயிருந்தாலும், தாங்கள் தப்பித்து இரட்சிக்கப்பட விரும்பி அவர்கள் தேவனிடம் திரும்பி வந்து விட்டால், இயேசு அவனுக்கு இரட்சகராய் மாறி, பாவத்தின் மரணபிடியிலிருந்து அவனை விடுவித்து, நித்திய ஜீவன் தருவார்! அல்லேலூயா.*

*– சாது சுந்தர்சிங்*

## ‘தாமதமானாலும்’ ஜெப ஜீவியம் தளராத தெய்வ அன்பு!

*என் ஆசிரம ஊழியத்தின் பல்வேறு பிரச்சனைகளின் ஊடாய் நான் கடந்து வந்தபோது, ‘நான் கர்த்தரிடத்தில் ஓடிச்செல்லும்’ ஜெப ஜீவியம் நாளுக்கு நாள் வலுப்பெற்றது. சிறுபிராயத்திலிருந்தே என் ஆசிரமத்தில் தங்கி வளர்ந்த வாலிப பெண்மணிகள் தவறாய் நடக்கும் போது* **‘இது எப்படி நடக்கலாம்?’ என்ற வெறுப்பு** *என் உள்ளத்தை பலமுறை தாக்கியுள்ளது. ஒரு தாயின் அன்பிற்கு இணையாய் எனது அன்பை ஊற்றி வளர்த்த பிள்ளைகள், இப்படி ஒரு நன்றி இல்லாத ஈனமான செயல்களைச் செய்வார்களோ? என்ற மனகிலேசம் என்னைத் தாக்கியுள்ளது. எங்கள் ஆசிரமத்து தேவைகளும் ‘மலைபோல் தோன்றி’ என் உள்ளத்தை வாட்டியதையும் கண்டேன்!*

இவை அனைத்திற்கும், நான் ஜெபம் செய்தது உண்மையாய் இருந்தாலும், “இதற்கெல்லாம் பதில் கிடைப்பது சாத்தியமில்லையோ?” என்ற விரக்தி என் உள்ளத்தைப் பாதித்தது. மனச்சோர்வோடு கூட, ஜெப வாஞ்சையும் என்னிடத்தில் குறைந்ததைக் கண்டேன்.

*இந்த இக்கட்டான நிலையில்* **‘எலியாவின் ஊக்கமான ஜெபத்தை’** *கர்த்தர் எனக்குப்போதித்தார்! பல வருடங்களாய் தேசத்தில் மழை பெய்யாத நிலையில் “மழை வேண்டுமென” முகங்குப்புற விழுந்து, அந்த கர்மேல் பர்வதத்தில் எலியா ஜெபித்தார். ஒருமுறை, அல்லது இருமுறை அல்ல, ‘ஆறுதரம்’ ஜெபித்தும் மேகம் ஒன்றும் தோன்ற வில்லை! ஆகிலும் எலியாவோ மனந்தளராமல் ‘மேகம் வரும்!’ என்ற உறுதியான விசுவாசத்தில் நிலைத்திருந்து ஜெபித்தார். அவர் தேசத்தின் மீது கொண்டிருந்த அன்பும், வாஞ்சையும் இந்த ஜெபத்தின் மூலமாய் வெளிப்பட்டது. தெய்வ அன்பின் ஆதாரமும் இவ்வாறாகவே இருக்கிறது. பதில் ஏதும் வராத நிலையில், ஆறுதரம் மாத்திரமல்ல ஆறு அறுபது தரமே ஆனாலும்,* **“ஒரு உள்ளங்கை அளவு ஒரு சிறிய மேகம் கூட எழும்பவில்லை”** *என எனக்கு அறிவிக்கப்பட்டாலும், மேகம் வரும்வரை காத்திருந்து ஜெபிக்க எனக்கு பொறுமையில்லாவிட்டால், கல்வாரி அன்பின் தெய்வ சினேகம் என்னிடத்தில் இல்லையோ? என்றே பேதலித்தேன் (1இராஜா.18:41).*

*என் ஜெப வாழ்க்கையை மீண்டும் திடப்படுத்தி “எலியாவின் ஊக்கமான ஜெபத்தை” என் முன் வைத்து முன்னேறினேன். இவ்வாறாகவே, கல்வாரியின் அன்பின் ‘நீடிய பொறுமையை’ நான் கொஞ்ச ம் கொஞ்சமாய் கற்றுக்கொண்டேன்!*

*– ஏமி கார்மைக்கேல்*

## ஜீவிய சுடர் எரிந்து.... வல்லமை பாய்ந்தோடியது!

*வா*ழ்வின் கடின சூழ்நிலைகளில் **'தன்னையே நம்பி வாழும்'** *அவரது சொந்த ஜனங்களை தேவன் ஒருபோதும் கைவிடுவதில்லை! அல்லது, பாராமுகமாய் இருப்பதில்லை! தேவன் கிரியை செய்கிறார், நேற்றும் இன்றும் 'என்றும்' கிரியை செய்கிறார்! அவருடைய* **ஜீவனுள்ள திவ்விய வார்த்தை** *என் நாவிலிருந்தால், இயற்கைக்கு அப்பாற்பட்ட மாபெரும் செயல்களை தம்முடைய ஆவியின் வல்லமை யால் செய்து முடிப்பார். அந்த* **ஜீவ வார்த்தையைக் கொண்டு** *சத்துருவின் வல்லமையை கட்டவும்! சிறைப்பட்டவர்களின் சிறையிருப்பை விடுதலைச் செய்யவும்! தேவன் நமக்கு அனுகூலம் செய்வார்!*

**இயேசுவின் ஜீவியம் அல்லது ஜீவன் நமக்குள் இல்லையென்றால், துயரமான ஜனங்களுக்கு, இயேசுவைப்போல் ஜீவன் தர நம்மால் முடியாது. "இயேசுவின் ஜீவனின்றி" பிறருக்கு கொடுக்கும் சுகம், பொய்யானதென்றும், போலியான தென்றும், கூற வேண்டும்!**

*பிறரை ஆசீர்வதிப்பதற்கு "தேவன் என்னோடு இருக்க வேண்டும்" என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்! 'சான் பிரான்ஸிஸ் கோவின்' பிரதான வீதியில், காரில் பயணம் செய்து கொண்டிருந்த போது, ஒரு பெரிய கூட்டம் சாலையின் அருகில் கூடியிருப்பதைக் கண்டு நான் காரை நிறுத்தினேன். அங்கு ஒரு பையன், கைகளும் கால்களும், உடல் முழுவதும் இழுப்பு நோய் கொண்டு மரண தருவாயில் இருந்தான். அச்சமயத்தில், ஜெபிப்பதற்கு கூட நேரமில்லை!* **ஏதாவது கிரியை செய்ய வேண்டும்,** *இல்லையென்றால் பையன் செத்துவிடுவான்!! அப்போஸ்தலர்.1:8-ல் கூறப்பட்ட* **'உன்னதத்தின் பெலனை' நான் சார்ந்து கொண்டு** *அந்த பையனின் தோள்பட்டையை தூக்கி வைத்து "இயேசுவின் நாமத்தில், இப்பொழுதே விடுதலை பெறுவாயாக" என கட்டளையிட்டேன். அடுத்த வினாடியே, அந்த பையன் குதித்து எழுந்து, ஓர் சிறிய புன்முறுவலை காண்பித்து விட்டு, கீழே விழுந்து கிடந்த சைக்கிளை எடுத்துக் கொண்டு 'பை' எனக்கூறி ஓட்டிச்சென்றான். கூடி இருந்த அத்தனை பேரும் வியப்புடன் பையன் போகும் திசையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இது எப்படி நடந்தது? நான் கைக்கொண்ட சூத்திரம் இதுதான்.... பரிசுத்தாவியின் ஜீவியம் என்னில் பற்றி எரிந்து கொண்டிருந்தது! அங்கிருந்து வல்லமை பாய்ந்தோடியது! திவ்விய சுகமும் மகிமையும் வெளிப்பட்டது! அவ்வளவுதான். தேவை நிறைந்த இந்த உலகத்திற்கு,* **இயேசுவின் ஊழியனாய்** *நாம் பணி செய்திட இவைகளே நமக்குத் தேவை!*

*– ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்*

## "ஏற்ற சமயம்" கை நழுவி, தோல்வியடையலாகுமா?

"**தோ**ல்வியின் ஜீவியம்" என்பது, நாம் சோதிக்கப்படும் வேளையில், பாவம் செய்வதேயாகும்! ஆனால், இயேசுவோ நம்மைப் போன்ற பெலவீன மாம்சத்தில் வெளிப்பட்டு, 'நம்மைப்போல் சோதிக்கப்பட்டும்' பாவம் செய்யாதவராயிருந்தார்.... என்பதே, "ஜெயத்தின் ஜீவியமாகும்!" (எபி.4:15). இயேசுவிடம் மலர்ந்த "ஜெய ஜீவியத்திற்கு" ஒரே காரணம்: "**ஏற்ற சமயத்தில் சகாயம், அல்லது உதவி (Help) செய்யும் கிருபையை (GRACE) அடைந்திட**" அவர் கிருபாசனத் தண்டைக்கு நெருங்கிச் சென்றதேயாகும்! (எபி.4:16).

பாவத்தில் தோல்வியடைந்தவர்கள், கூறுவதெல்லாம் "நாங்கள் ஜெயித்து வாழ்வதுபோல் தோன்றினாலும், தோல்வியில் விழுகிறோம்!" என்பதுதான். அவர்களின் அறிக்கை 'ஏற்ற சமயத்தில் உதவும் கிருபையை' நாங்கள் பெறவில்லை என்பதுதான். பாலிய மோகத்திற்கோ, கோபத்திற்கோ, பண ஆசைக்கோ, பகைக்கோ..... ஆகிய ஏதாகிலும் ஒன்று, அந்த 'ஏற்ற சமயத்தில்' அவர்களைத் தோல்வி யடையச் செய்கிறது!

**தெலீலாள்** என்ற பெலிஸ்திய பெண்ணிடம், கர்த்தருடைய ஆவியைப் பெற்ற **சிம்சோன்** அடைந்த தோல்வியை கவனித்துப் பாருங்கள்! அவள், மூன்று தடவை சிம்சோனை ஜெயித்திட முயன்றும், கர்த்தருடைய ஆவியின் பெலனைக்கொண்டு, சிம்சோன் ஜெயித்து வந்தான்! ஆனால், அவன் வீழ்ச்சியடைந்த நான்காவது தடவையில் நாம் காணும் வித்தியாசம்: "சிம்சோன், தெலீலாள் மடியிலே நித்திரை செய்தான்" என்ற சோதனையின் உச்சகட்டமேயாகும்! (நியாயாதி.16:19). ஆ, அந்த உச்சகட்ட சோதனையன்றோ, அவன் "ஏற்ற சமயத்தில் தேவனுடைய ஆவியின் உதவியை நாடி" கிருபாசனைத்தண்டை கிட்டிச்சேரும் நேரம்! அந்த 'ஏற்ற சமயம்' கை நழுவி, பாலிய பாவம் செய்தான்! தாவீது புகழப்பட்ட சமயம், சவுல் ராஜாவின் 'ஏற்ற சமயம்' கை நழுவி, தாவீதின் மீது கோபம் கொண்டான்! அவனை கொலை செய்யவும் வகை தேடினான்! (1சாமு.18:7-9). யூதாஸ்காரியோத்துவிற்கு 'ஏற்றசமயம்' கை நழுவி, "30 - வெள்ளிக் காசை" நாடச் செய்து, குருவை காட்டிக்கொடுத்தான்!

கவனம்! சோதனையின் **உச்சகட்ட 'ஏற்ற சமயத்தில்'** உங்களின் வெற்றி - தோல்வி அடங்கியுள்ளது என அறிந்து, இயேசுவைப்போல் கிருபாசனத்தண்டை சேர்ந்து 'ஏற்ற சமயத்தில்' உதவி புரியும் கிருபையைப் பெற்று, பாவம் செய்யாது 'எப்பொழுதும்' வெற்றி சிறக்கக்கடவோம்!

– T.ரத்தினகுமார்

## ஜேம்ஸ் (இயேசுவுக்கு இளைய சகோதரன்), (AD 63)

### ஆலய கோபுரத்தில் இயேசுவை அறிவித்து, உயிர் நீத்தார்!



இயேசுவின் இளைய சகோதரனாகிய யூதாவைப்போலவே 'ஜேம்சும்' அவருடைய சகோதரனாயிருந்தார். தேவனை தன்னுடைய பிதா என்றும், பிதாவின் நாமத்தில் இயேசு செய்த ஊழியத்தைக் குறித்தும், தன் மூத்த சகோதரனாகிய இயேசுவை, இந்த ஜேம்ஸ் எப்போதும் சந்தேகம் கொண்டிருந்தார். அக்காலத்தில், இயேசுவுக்குப் பின் பிறந்த அவருடைய சகோதர சகோதரிகள் அனைவருமே, இயேசுவை சந்தேகித்தார்கள். இயேசு சிலுவையில் அறையப்பட்டு, பின்பு அவர் மறுபடியும் உயிர்த்தெழுந்ததைக் கண்ட பிறகுதான் ஜேம்ஸ் அவரை முழு இருதயமாய் விசுவாசித்தார். 30 ஆண்டுகளாய் எருசலேமிலிருந்த கிறிஸ்தவ சபைக்கு ஒரு மூப்பராயிருந்தார் இந்த ஜேம்ஸ். அந்நாட்களில் அவர் எழுதிய புத்தகமே புதிய ஏற்பாட்டில் காணப்படும் யாக்கோபின் நிருபமாகும் (Book of James). எருசலேமின் எல்லா வீதிகளிலும் "இயேசுவே மேசியா என்றும்! உயிர்த்தெழுந்த தேவ குமாரன் என்றும்!" தைரியமாய் அறிவித்திருந்தார்.

அன்று பஸ்கா பண்டிகை! அந்த நாளில் ஜேம்ஸ்-ஐ சிறைப்படுத்திய பிரதான ஆசாரியர்கள் அவரை எருசலேமின் தேவ ஆலயத்தின் கோபுர உச்சிக்கு இழுத்துச் சென்றார்கள். கோபுர உச்சியில் நிற்க வைத்து "நசரேயனாகிய இயேசு மேசியா அல்ல! இயேசு தேவ குமாரன் அல்ல! அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவில்லை!" என் இயேசுவை மறுதலிக்க கட்டாயப்படுத்தினார்கள். அப்படி இல்லையென்றால், 'அவரை தேவ ஆலயத்தின் உச்சியிலிருந்து கீழே தள்ளி விடுவதாக' பயமுறுத்தினார்கள். அங்கேயிருந்து கீழே பார்த்த ஜேம்ஸ், திரளான ஜனங்கள் தன்னை மேல் நோக்கி பார்த்து கொண்டிருப்பதைக் கண்டார்.

பிரதான ஆசாரியர்களின், பரிசேயர்களின் அச்சுறுத்தலை புறம்பே தள்ளிய ஜேம்ஸ் பரிசுத்தாவியில் நிறைந்த தைரியத்தோடு அங்கு கூடியிருந்த எல்லா ஜனங்களும் கேட்கும்படி "இயேசுவே வாக்குதத்தம் செய்யப்பட்ட மேசியா! பிதாவின் வலது பாரிசத்தில் இப்போது அமர்ந்திருக்கிறார்! மேகங்கள் சூழ மீண்டும் இந்த பூமிக்கு வருவார்! உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்ப்பார்!" என உரத்த சத்தமாய் எல்லோரும் கேட்கும்படி அறிவித்தார். கோபத்தால் கொப்பளித்த ஆலய தலைவர்கள் அவருடைய முதுகிற்கு பின்னாலிருந்து ஆத்திரமுடன் கீழே தள்ளி விட்டார்கள். கீழே தள்ளி அவருடைய கால் எலும்புகள் முறிந்தாலும், அவரோ மரிக்கவில்லை. கோபமாயிருந்த ஆலய தலைவர்கள் "இவனை இழுத்து கல்லெறியக்கடவோம்" என கட்டளையிட, சுற்றி நின்ற ஆலயத்திலிருந்த யூதர்கள் அவரை கல்லெறிந்து கொன்றார்கள். அந்த நிலையிலும் தன் உடைந்துபோன கால்களால் முழங்காலில் நின்று "ஆண்டவரே இவர்கள் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாது செய்கிறார்கள், தயவாய் மன்னியும்" என ஜெபித்து சரிந்து விழுந்தார். அப்போது அங்கு நின்று கொண்டிருந்த ஒரு ஆசாரியன் "அவன் நமக்காகத் தானே ஜெபித்தான்! ஏன் அவனை கல்லெறிந்து கொன்றீர்கள்" என மனமுடைந்து கூறினார்!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## 'களை விதைத்தவன்' கனி பறித்திடக் கூடுமோ? வாலிபனே எச்சரிக்கை!

சில ஆண்டுகளுக்கு முன்பு, நான் பாரீஸ் நாட்டிற்குச் சென்றிருந்த சமயம், அங்கு நடந்ததோர் வேதாகம கண்காட்சியை நான் காணச் சென்றிருந்தேன். காட்சி சாலையின் சுவரில் ஒரு படம் தொங்கிக்கொண்டிருந்தது. அது 'களைகளை' விதைக்கும் ஒரு மனிதனின் காட்சியாகும். படத்தின் கீழ் "களைகளை விதைக்கும் மனிதன்" என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது. அவனுடைய முகம் பித்துப்பிடித்த பேயனைப்போல கோர பயங்கரமாயிருந்தது! ஒரு துஷ்ட தேவதையின் முகத்தைப்போல அவன் முகம் எனக்குத் தென்பட்டது. அவனுடைய கரத்திலே களைவித்துக்கள் அடங்கியதோர் கூடை இருந்தது!

அவன் ஒவ்வொரு முறையும் ஒரு களையை பூமியிலே விதைக்கையில், ஒரு பாம்பு ஒன்று அவன் கரத்தின் வழியாக ஊர்ந்து நகர்ந்து ஏறி, அவன் உடலையே நன்றாக வளைத்துச் சுற்றிக்கொள்ளும்! அவனுக்கு சற்று தூரத்திலுள்ள மரக்கூட்டம் நடுவில் பூமியின் நானாவித துஷ்ட மிருகங்களும் குடி இருப்பதாக சித்தரிக்கப்பட்டிருந்தது. அந்தப் படமானது என் மனதிலே அப்படியே பதிந்துவிட்டது. ஆம் "களைகளை விதைக்கும் மனிதன்" தன் ஜீவியத்திலோ, அல்லது தன் சிநேகிதர் ஜீவியத்திலோ களைகள் விதைப்பது 'உயிர் கொல்லும் துஷ்டம்' என இந்த சித்திரம் எச்சரித்து விளக்கியிருந்தது!

என் அருமை வாலிபர்களே, நீங்கள் களைகளை விதைத்தால் களைகளையேதான் அறுப்பீர்கள். மதுவிற்போரும், சூதாட்டக்காரர்களும், கொலைபாதகரும், துன்மார்க்க T.V மற்றும் மொபைல் காமவிகார காட்சி கொண்டு, மற்றவர்களை நாசமடையப்பண்ணியவர்களும், அவர்களோடு சேர்ந்து நாசமடைகிறவர்களும், மனந்திரும்பாமல் பரலோகத்திற்குள் பிரவேசிக்கக்கூடும் என்று நீங்கள் எண்ணுகின்றீர்களோ? இல்லவே இல்லை, களைகளை விதைக்கும் அவர்கள், களைகளையேதான் கட்டாயம் அறுக்க வேண்டும்! இந்த தெய்வ பிரமாணத்தை எச்சரிக்கையாய் எடுத்துக்கொண்டு, மனந்திரும்புங்கள்!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.